**கவனிக்க.**-*2024.11.08 ஆந் திகதிய இல.2410ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2411 - 2024 නොවැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.14

*2411 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 202 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2024, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


201- B 082627- 353 (2024/11)

# நானாவித அறிவித்தல்கள்

## முடித்தல் அறிவித்தல்

### வணிக நியாயாதிக்கத்தைச் செயற்படுத்தும் ( கொழும்பில் அமைந்துள்ள) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் (சிவில்)

வழக்கு இலக்கம் :
HC/ (CIVIL)/49/ 2024/CO
பண்பு : நிறுவனம் (முடித்தல்)
பெறுமதி: ரூ. 19,930,300.00

தெஹிவளை, துட்டுகெமுனு வீதி, இல. 33/1, பி.ஆர். ஜே. டபிள்யூ. என்டபிறைசஸ் தொடர்பில்

*மற்றும்*

*1939 முடித்தல் விதிகளுடன் வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பாகம் XII இன் கீழ் நீதிமன்றத்தினால் முடித்தலுக்கான விண்ணப்பம் ஒன்று தொடர்பில்,*

சரத் ஜயகொடி லியனகே,
இல. 19, 9 ஆவது குறுக்கு ஒழுங்கை, பொருபன வீதி, இரத்மலானை.

*2024, திசெம்பர் 19 ஆந் திகதியில் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்ட மனு மற்றும் இரத்மலானை,பொருபன வீதி, 19 ஆவது குறுக்கு ஒழுங்கை ,இல. 19 இன் சரத் ஜயசோம லியனகேவினால் குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்த வணிக நியாயாதிக்கத்தைச் செயற்படுத்தும் ( கொழும்பில் அமைந்துள்ள) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் ( சிவில்) மேற் குறிப்பிடப்பட்டிருந்த நிறுவனத்தின் முடித்தலுக்கான 2024.07.29 ஆந் திகதிய திருத்தப்பட்ட மனு தொடர்பில் இத்தால் அறியத்தரப்படுவதோடு, கூறப்பட்ட நிறுவனத்தின் எந்த ஒரு கடன்கொடுநர் அல்லது பங்களிப்பாளர் கூறப்பட்ட மனு மீதான உத்தரவை மேற்கொள்வதற்கு ஆதரவு அல்லது எதிர்ப்புக்கான விருப்பை வெளியிட நேரடியாக அல்லது இந்த நோக்கத்திற்கான தமது சட்டத்தரணி மூலம் விசாரணையில் தோன்றலாம் என்பதோடு கூறப்பட்ட நிறுவனத்தின் எந்த ஒரு கடன்கொடுநர் அல்லது பங்களிப்பாளரும் கீழே கையொப்பமிட்டு பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் மனுவின் பிரதி ஒன்றைப் பெற முடியும்.*

*குமுது ராஜபக்ஷ,
ஆய்வுச் சட்டத்தரணி,
இல. 1394/5, ஹோகந்தர வீதி, பன்னிப்பிட்டிய.*

**குறிப்பு**: *கூறப்பட்ட மனுவின் விசாரணையில் தோன்றுவதற்கு எதிர்பார்க்கும் எந்த ஒருவரும் அதனைச் செய்வதற்கான தமது நோக்கத்தை எழுதிய அறிவித்தலை மேல் பெயரிடப்பட்ட குமுது ராஜபக்ஷவுக்கு வழங்கல் அல்லது தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அந்த அறிவித்தல் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது நிறுவனம் ஒன்றாக இருந்தால் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு அந்த நபர் அல்லது நிறுவனம் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் ( இருந்தால்) கையொப்பம் இட்டு சமர்ப்பித்தல் அல்லது தபாலில் இடுவதாயின் 2024, திசெம்பர் 18 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணி தாமதிக்காது மேல் குறிப்பிடப்பட்டவருக்கு கிடைப்பதற்கு போதுமான காலத்தில் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

*குமுது ராஜபக்ஷ,
ஆய்வுச் சட்டத்தரணி.*

*இல. 1394/5,
ஹோகந்தர வீதி,
பன்னிப்பிட்டிய.*

*11- 179*

**முடித்தல் அறிவித்தல்**

**மேற்பார்வைக்கு உட்பட்டது, நிறுவனத்தை கலைப்பதற்கான உத்தரவு**

***2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை***

**கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் நடைபெறுகின்றது (குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்)**

வழக்கு இலக்கம் :
CHC/ 82/ 2019/CO
தன்மை : ஒடுக்குதல்
நடைமுறை: சுருக்கம்
பெறுமதி: ரூ.1,000,000.00

*கொழும்பு -07, தர்மபால மாவத்தை, இல. 245 இல் அமைந்துள்ள "டி.கே.எஸ் பினான்ஸ் லிமிடட்" நிறுவனம் தொடர்பானது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் படி கம்பனிகளை ஒடுக்குதல் விதிகளின் கீழ் நிறுவனத்தை கலைப்பு செய்வதற்கான நீதிமன்ற உத்தரவு.*

டி.கே.எஸ். பினான்ஸ் லிமிடட்,
இல. 245, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.

*மனுதாரர்*

மனுவிற்கமைய இந்த நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் டி.கே.எஸ். பினான்ஸ் கம்பனி லிமிடட் இன் விருப்புக் கலைப்பு தொடரப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. மேலும் இந்நீதிமன்றம் தகுந்தது எனக் கருதும் மேற்படி விருப்புக்கலைப்பின் படியான எந்தவொரு நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ளப்படும், மற்றும் மேற்படி நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அதன் சொத்துக்களை பணமாக மாற்றியதன் முன்னேற்றம் மற்றும் நீதிமன்றம் காலத்திற்குக் காலம் உத்தரவிடக்கூடிய கலைப்பு தொடர்பான ஏனைய விடயங்கள் குறித்தும், மேற்படி நிறுவனத்தின் விருப்புக் கலைப்பிற்கு நியமிக்கப்பட்ட கலைப்பதிகாரி அல்லது அப்போதைக்குள்ள மற்றைய கலைப்பதிகாரி எதிர்வரும் திசெம்பர் மாதம் 02 ஆந் திகதியன்று மற்றும் அதன் பின்னர் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் நீதிமன்ற செயலாளரிடம் எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தின் கலைப்பதிகாரியினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு சட்டத்தரணிக்குமான செலவுகள் கட்டணங்கள் அல்லது சிறப்பு ஊதியம் அல்லது கலைப்பதிகாரிக்கான ஊதியம், கட்டணங்கள் அல்லது செலவுகள் அல்லது எந்தவொரு முகாமையாளர், கணக்காளர், ஏலதாரர், தரகர் அல்லது பிற நபர்களுக்கான செலவுகள் போன்றவை அனைத்தும் நீதிமன்ற செயலாளரால் வரி விதிக்கப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி மேற்படி நிறுவனத்தின் சொத்துக்களிலிருந்து செலுத்தப்படக்கூடாது என உத்தரவிடப்படுகிறது. மேலும் அத்தகைய செலவுகள், கட்டணங்கள் செலவினங்கள் மற்றும் ஊதியங்கள் அதற்கேற்ப வரி விதிக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரரின் செலவுகளும் உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தின் கடன்கொடுனர்கள், பங்களிப்பாளர்கள், கலைப்பதிகாரி மற்றும் ஆர்வம் கொண்ட அனைத்து நபர்களும் தேவை ஏற்படும் போதெல்லாம் பொதுவாக விண்ணப்பிக்க உரிமை உடையவர்களாக இருக்கின்றார்கள்.

மனுதாரரின் சட்டத்தரணி.

*11- 186*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.